**Latest Notes Tnpsc Group 2&4 Vao =Tet &Pg TRB Exams Tamil Material**

(தமிழ் 10- ஆம் வகுப்பு)

# கம்பராமாயணம்

### ஆசிரியர் குறிப்பு:

- பெயர் = கம்பர்
- ஊர் = சோழநாட்டு திருவழுந்தூர்
- தந்தை = காளி கோவில் பூசாரியான ஆதித்தன்
- மகன் = அம்பிகாபதி
- மகள் = காவிரி

### ஆசிரியரின் சிறப்பு பெயர்:

- கவிச்சக்ரவர்த்தி
- கவிப்பேரரசர்
- கவிக்கோமான்
- கம்பநாடுடைய வள்ளல்

### இவரின் படைப்புகள்:

- ஏர் எழுபது
- சிலை எழுபது
- திருக்கை வழக்கம்
- சரஸ்வதி அந்தாதி
- சடகோபர் அந்தாதி(நம்மாழ்வார் பற்றியது)

### கம்பராமாயணத்தின் சிறப்பு பெயர்கள்:

- கம்பசித்திரம்
- கம்பநாடகம்
- தோமறுமாக்கதை
- இயற்கை பரிணாமம்

### நூல் அமைப்பு:

- காண்டம் = 6

tnpsctamilnadu.weebly.com

# கம்பராமாயணம்

- படலம் = 113
- மொத்த பாடல்கள் = 10569
- முதல் படலம் = ஆற்றுப்படலம்
- இறுதிப்படலம் = விடை கொடுத்த படலம்

## காண்டங்கள்:

- பால காண்டம்
- அயோத்தியாகாண்டம்
- ஆரண்யகாண்டம்
- கிட்கிந்தா காண்டம்
- சுந்தர காண்டம்
- யுத்தகாண்டம்
- ஏழாவது காண்டம் ஒட்டக்கூத்தர் பாடிய “உத்தர காண்டம்”

## சிறப்பு:

- மு.இராகவையங்கார் = “வடமொழி தென்மொழிக் காப்பிய நயங்களாகிய பொன் மையில் தம் சித்திரக்கோலைத் தோய்த்துத் தம் கப்பிய ஓவியத்தைக் கம்பநாடார் வரைந்தார்".
- வ.வே.சு.ஐயர் = “கம்பயராமாயணம் தனக்கு முதல் நூலான வான்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியமாகும்”
- எஸ்.மகாராஜன் = “உலகத்திலேயே வேறொரு நாட்டில், இவ்வளவு பழமையான கவிஞன் இருபதாம் நூற்றாண்டு மக்களுடைய மனதை இப்படி ஆட்கொண்டதில்லை”
- பாரதியார் = “கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு” என்கிறார்.பாரதியார் = “கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை” என்கிறார்.
- கவிமணி = “வீசும் தென்றல் காற்றுண்டு - கையில் கம்பன் கவியுண்டு” என்கிறார்.
- “கல்வியிற் பெரியவர் கம்பர்”
- “கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்”
- “கம்ப நாடன் கவிதையிற்போல் கற்றோருக்கு இதயம் களியாதே”
- “விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்”
- தமிழுக்கு கதி = கம்பர், திருவள்ளுவர்
- 96 வகை ஓசை வகைகளை கம்பர் கையாண்டுள்ளார்.

## ஆசிரியர் குறிப்பு:



tnpsctamilnadu.weebly.com

# கம்பராமாயணம்

- கம்பர் தேரழுந்தூரில் பிறந்தார்.
- இவ்வூர், நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது.
- கம்பரின் தந்தையர் ஆதித்தன்.
- கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர்.
- இவரைத் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் ஆதரித்தவர்.
- காலம் கி.பி.பன்னிரெண்டாம் நூற்றாண்டு.
- தம்மை ஆதரித்த வள்ளல் சடயப்பரை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் எனப் பாடிச் சிறப்பித்துள்ளார்.
- கம்பராமாயணம், சடகோபர் அந்தாதி, சிலை எழுபது, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய கம்பர் இயற்றிய நூல்கள்.
- சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் ஆகியோர் இவர் காலத்துப் புலவராவர்.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும், விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன், கல்வியிற் பெரியவர் கம்பர் என்னும் தொடர்கள் கம்பரின் பெருமையை அறியலாம்.
- "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்" என்று பாரதியார் கம்பரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

## நூல்குறிப்பு:

- வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார்.
- கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயணம் எனப்பட்டது.
- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
- கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது.
- காண்டம் என்பது பெரும்பிரிவையும் படலம் என்பது அதன் உட்பிரிவையும் குறிக்கும்.
- இந்நூலின் சிறப்புக் கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் "தமிழுக்கு கதி" என்பர்.
- குகப்படலம் அயோத்தியா காண்டத்தில் ஏழாவது படலம் ஆகும். இதனை கங்கைப் படலம் எனவும் கூறுவர்.

## பொதுவான குறிப்புகள்:

tnpsctamilnadu.weebly.com

# கம்பராமாயணம்

- கம்பராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் = இராமாவதாரம்
- கம்பர் இறந்த இடம் = நாட்டரசன் கோட்டை
- கம்பரின் சமாதி உள்ள இடம் = நாட்டரசன் கோட்டை
- வான்மீகி எழுதாத “இரணியன் வதைப் படலம்” கம்பராமாயணத்தின் மிக சிறந்த பகுதியாக கருதப்படுகிறது.
- கம்பராமாயணம் ஒரு வழி நூல்
- கம்பர் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலை 1000 பாடல்களுக்கு ஒருமுறை பாடியுள்ளார்.
- கம்பார் தன் காப்பியத்தை அரங்கேற்றிய இடம் = திருவரங்கம்
- கம்பருக்கு தமிழக அரசு திருவழுந்தூரில் மணி மண்டபம் அமைத்து சிறப்பித்துள்ளது.
- இவர் மூன்றாம் குலோத்துங்கனின் அவை களப் புலவர் ஆவார்.
- இவரின் மகன் அம்பிகாபதி சோழன் மகளை காதலித்ததில் ஏற்பட்ட பிரச்சனையில் அம்பிகாபதி, அமராவதி இருவரின் உயிர் நீங்க, இவர் சோழ நாட்டை விட்டு வெளியேறினார்.
- 15 நாட்களில் கம்பராமாயாணம் முழுவதும் எழுதி முடித்தார்(10569 பாடல்கள்)

## மேற்கோள்:

- தாதகு சோலை தோறும் செண்பகக் காடு தோறும்
- எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தாலே
- இல்லாரும் இல்லை உடையாரும்
- இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்
- அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினால்
- இன்று போய் நாளை வா
- வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்
- வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
- உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்
- கை வண்ணம் அங்குக் கண்டேன்
- கால் வண்ணம் இங்குக் கண்டேன்
- அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதம்மா

## சொற்பொருள்:

- ஆயகாலை - அந்த நேரத்தில்



tnpsctamilnadu.weebly.com

- அம்பி - படகு
- நாயகன் - தலைவன்
- நாமம் - பெயர்
- கல் - மலை
- திரள் - திரட்சி
- துடி - பறை
- அல் - இருள்
- சிருங்கிபேரம் - கங்கைககரையோர நகரம்
- திரை - அலை
- மருங்கு - பக்கம்
- நாவாய் - படகு
- நெடியவன் - இராமன்
- இறை - தலைவன்
- பண்ணவன் - இலக்குவன்
- பரிவு - இரக்கம்
- குஞ்சி - தலைமுடி
- மேனி - உடல்
- மாதவர் - முனிவர்
- முறுவல் - புன்னகை
- விளம்பல் - கூறுதல்
- கார்குலாம் - மேகக்கூட்டம்
- பார்குலாம் - உலகம் முழுவதும்
- குரிசில் - தலைவன்
- இருத்தி - இருப்பாயாக
- நயனம் - கண்கள்
- இந்து - நிலவு
- நுதல் - நெற்றி
- கடிது - விரைவாக
- முரிதிரை - மடங்கிவிழும் அலை
- அமலன் - குற்றமற்றவன்
- இளவல் - தம்பி

## இலக்கணக்குறிப்பு:

# கம்பராமாயணம்

- போர்க்குகன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
- கல்திரள்தோள் - உவமைத்தொகை
- நீர்முகில் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை
- இருந்தவள்ளல் - பெயரெச்சம்
- வந்துஎய்தினான் - வினையெச்சம்
- கூவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- குறுகி, சேவிக்க - வினையெச்சம்
- கழல் - தானியாகுபெயர்
- அழைத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று
- வருக - வியங்கோள் வினைமுற்று
- பணிந்து, வளைத்து, புதைத்து - வினையெச்சம்
- இருத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று
- தேனும் மீனும் - எண்ணும்மை
- மாதவர் - உரிச்சொற்றொடர்
- அமைந்த காதல் - பெயரெச்சம்
- தழீஇய - சொல்லிசை அளபெடை
- கார்குலாம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- உணர்த்துவான் - வினையாலணையும் பெயர்
- தீராக் காதலன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- மலர்ந்த கண்ணன் - பெயரெச்சம்
- இனிய நண்ப - குறிப்புப் பெயரெச்சம்
- நெடுநாவாய் - பண்புத்தொகை
- தாமரை நயனம் - உவமைத்தொகை
- நனிகடிது - உரிச்சொற்றொடர்
- நெடுநீர் - பண்புத்தொகை
- என்னுயிர் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- நன்னுதல் - பண்புத்தொகை
- நின்கேள் - நான்காம் வேற்றுமைத்தொகை

tnpsctamilnadu.weebly.com